# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பாராளுமன்றப் பணியாளர் பௌத்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

**2008, மாச்சு மாதம் 14 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2008 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பாராளுமன்றப் பணியாளர் பௌத்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.ஒ. (கூட்) 28/2005

**பாராளுமன்றப் பணியாளர் பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

"பாராளுமன்றப் பணியாளர் பௌத்த சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கேற்பச் சொல்லப்பட்ட சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றியும் ; அத்துடன் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதுகாலவரை தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட சங்கமானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அந்த விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பாராளுமன்றப் பணியாளர் பௌத்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாராளுமன்றப் பணியாளர் பௌத்த சங்கத்தில் தற்போது உறுப்பினர்களாகவுள்ளவர்களும் இத்தால் அமைத்து உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாராளுமன்றப் பணியாளர் பௌத்த சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

பாராளுமன்றப் பணியாளர் பௌத்த சங்கம் என்னும் பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; மேலும் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதானது எப்பொதுக் குறிக்கோள்களுக்காகவோ, அப்பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்தப் படுகிறது :—

(அ) பௌத்த மதத்தையும் பௌத்த கலாசாரத்தையும் பாதுகாப்பதுடன் சமய அலுவல்களை செய்விப்பதற்காக உறுப்பினர்களை வழிநடாத்துதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களை மத சார்பானதொரு வாழ்க்கையை இயலச்செய்வதற்குத் தேவையான தானம், சீல வழிபாடு, தியானம் மற்றும் அதைப்போன்ற கருத்திட்டங்களை ஆரம்பித்துக் கொண்டுநடாத்துதல் ;

(இ) அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள்மூலம் பௌத்த நடவடிக்கைகளை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ; அத்துடன்

(ஈ) மேற்காண் குறிக்கோள்களுக்கு ஏற்புடையதான குறிக்கோள்களைக் கொண்ட ஏனைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் பௌத்த சமய நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, வங்கிக் கணக்குகளைத் திறக்கவும் நடைமுறைப்படுத்தவும் முடிவுறுத்தவும், பிணையத்துடனோ, இன்றியோ கடன் பெறவும் அல்லது நிதி உருவாக்கவும் நன்கொடைகள் மற்றும் கொடைகளைப் பெறவும் அல்லது

சேகரிக்கவும், அதன் நிதியங்களை முதலீடு செய்யவும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைக் கொண்டுநடாத்துவதற்குத் தேவையான அலுவலர்களையும், பணியாட்களையும் ஈடுபடுத்தவும் ஊழியத்திலமர்த்தவும், வேலைநீக்கம் செய்யவுமான தத்துவங்களுடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்கனவான எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் செயலாற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளின்படி முகாமைக் குழுவொன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) முகாமைக் குழுவானது, தலைவரொருவர், ஒரு உப தலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், பிரதம அமைப்பாளர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இருபத்தொரு பேர்களையும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முதல் நாளன்று பதவி வகிக்கும் நிறுவகத்தின் முகாமைக்குழு உறுப்பினர்களைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) கூட்டுத்தாபனத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களது விலகல் மற்றும் அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும் முகாமைக்குழுவின் பதவிதாங்குநர்களையும் உறுப்பினர்களையும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், வேலையாளர்கள் என்போரைத் தேர்ந்தெடுப்பதற்காகவும்; அத்துடன் கூட்டுத்தாபனத்தினதும் முகாமைக்குழுவினதும் கூட்ட அலுவல்களை கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், அத்துடன், பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதலும் ஆகியவை சம்பந்தமாகக் கூட்டுத்தாபனத்தால் காலத்துக்குக்காலம் அதன் எந்தவொரு பொதுக்கூட்டத்திலும், அதில் பங்குகொள்ளும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாதவாறான பெரும்பான்மையினரால், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் எழுத்திலான வேறேதும் சட்டத்திற்கும் ஒவ்வாதனவாறில்லாத விதத்தில் விதிகளை ஆக்கலாம்.

ஆயினும், எவ்வாறாயினும் அத்தகைய சேர்த்தல், திருத்தம் அல்லது இல்லாதொழித்தல் எதுவும் முகாமைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டாலன்றிப் பயனுறுதல் ஆகாது.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதிகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப் படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராக இருத்தல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழு கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம் பற்றித் தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழுவால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்றதொரு கணக்காய்வாளரினால் கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பந்தியில் தகைமைபெற்ற கணக்காய்வாளர் என்பது —

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவரான ஆள் ஒருவர் என்று பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக விருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று

எனப் பொருளாகும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனங்களை வைத்திருக்கலாம்.

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு ஆகியவற்றின் பயன் காரணமாக அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கையேற்கச் சட்டப்படி ஆற்றலும் வல்லமையும் உடையதாதல் வேண்டும். அத்துடன் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, பரிமாற்றம் செய்ய அல்லது வேறுவகையில் கையுதிர்க்கக்கூடிய முழுத்தத்துவத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது தலைவரினதும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு இணங்க அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் எவரேனும் நிறைவேற்றுக்குழு உறுப்பினரைதும் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடல் சாட்சிக்காரரால் எவரேனும் ஆள் ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

10. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்திற்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்றவகையாக இதுகாலவரை அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் சங்கத்தின் முகாமைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தால் அல்லது கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன்கள்.

**11.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று சங்கத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று சங்கத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலனவான சந்தாப்பணங்களும் உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையும் ஆன வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்